# கலைஞரின் இந்தி எதிர்ப்புப் போராட்டம்

மைதிலி ராசேந்திரன்

அகவி

# கலைஞரின் இந்தி எதிர்ப்புப் போராட்டம்

மைதிலி ராசேந்திரன்

அகவி
C 486, நாதன் இல்லம்
46வது தெரு, 9வது அவென்யூ
அசோக் நகர், சென்னை-83

முதற் பதிப்பு : பிப்ரவரி 9, 1990

**விலை ரூ : 3-00**

வெளியீடு

அகவி

C 486, நாதன் இல்லம்

46வது தெரு, 9வது அவென்யூ

அசோக் நகர், சென்னை-83

தொலைபேசி : 4821205

அச்சிட்டோர் :

ஸ்ரீ ராஜேஸ்வரி பிரிண்டிங் ஒர்க்ஸ்

சென்னை-600 005

# கலைஞரின் இந்தி எதிர்ப்புப் போராட்டம்

''இராசேந்திரா!
செத்தாலும் உன்னைப்போல் சாகவேண்டும்
செங்குருதி நிலத்தினிலே கொட்டவேண்டும்''

''இந்திக்குத் தமிழென்ன தாழ்வு—இதை
எதிர்க்காத தமிழர்க்கு இனியென்ன வாழ்வு''

என்றெல்லாம் முழக்கமிட்டவாறு இந்தியை எதிர்த்து நிகழ்ந்த வீரம் செறிந்த போராட்டங்களின் விளைநிலமாகத் தமிழகம் 1938 முதல் விளங்கி வந்திருக்கிறது. இந்தி எதிர்ப்பு என்பது எப்போதோ வந்துபோகும் வால் நட்சத்திரமன்று. கடந்த அரை நூற்றாண்டுக் காலமாகத் தமிழர்களின் இரத்த ஓட்டத்தில் அது சூடேற்றும் பகை மூட்டமாக இருந்து வருகிறது. சூரிய மறைவுக்குக் காத்துக் கிடக்கும் பனி மூட்டத்தைப் போன்று திராவிட இயக்கத்தின் தளர்ச்சிக்காகக் காத்திருந்து தலை நீட்டுவதும், எதிர்ப்பு வந்தால் தலைதெறிக்க ஓடுவதுமாக இந்திமொழி ஆதிக்கம் கண்ணாமூச்சி ஆடிக் கொண்டிருக்கிறது. அதற்கு முற்றுப்புள்ளி வைக்கும் போராட்டங்களில் முன் வரிசையில் நின்று வரும் கலைஞரின் பங்கு பற்றிய ஆய்வே இந்நூலாகும்.

**மொழி ஆதிக்கப் பின்னணி :** மொழி ஆதிக்கத்திற்கான சமூக அரசியல் பொருளாதாரப் பின்னணி, எல்லா நாட்டிற்கும் பொதுவானதே. ஆளும் வர்க்கம், தனது வர்க்க நலன்களுக்கேற்ப, தம் கீழ் உள்ள நாடுகளைச்

சந்தையாக்கிக் கொள்வதற்காகவும், தம் இனத்தின் மேம்பாட்டிற்காகப் பிற இனங்களை இரண்டாம்தரக் குடிமக்களாக்குவதற்காகவும், தமது மொழியைப் பெரும்பான்மை என்ற பெயரில் திணிக்க இயல்வது இயல்பே. **இந்தியா இதற்கு விதிவிலக்காக இல்லை; எடுத்துக்காட்டாகவே இருக்கிறது.** பல்வேறு தேசிய இனங்களின் சிறைக் கூடமாக விளங்கும் இந்தியாவில், இந்திக்காரர்களின் மேலாதிக்கத்திற்கேற்பவே இந்தி மொழியின் ஆதிக்கமும் தொடர்கிறது.

**முதல் மொழிப் போராட்டம்:** நிர்வாக நலனுக்காக ஆங்கிலேயர்கள் இந்தியாவைப் பல்வேறு பகுதிகளாகப் பகுத்திட்டனர். அவ்வாறு வங்காளத்தைக் கிழக்கு வங்காளம் மேற்கு வங்காளம் என்று பிரித்ததை எதிர்த்து, மொழி அடிப்படையில் வங்காளிகள் கிளர்ந்தெழுந்த போது 1911 ஆம் ஆண்டு ஆகஸ்டு 25 ஆம் நாள் மீண்டும் 'ஒரே வங்காளம் உருவானது. மொழிப் பிரச்சினையில் மக்கள் ஒன்றுபட்டுப் போராடி வெற்றி பெற்றதற்கு இந்திய வரலாறு காட்டும் முதல் நிகழ்ச்சி அதுவே. இதன் தொடர்ச்சியாக ஆந்திரர்களும் சிந்தியர்களும் போராடத் தொடங்கினர். இவற்றின் விளைவால் 1920 ஆம் ஆண்டு கூடிய காங்கிரஸ் கட்சியின் ஆண்டு கூடிய காங்கிரஸ் கட்சியின் ஆண்டுக்கூட்டத்தில் இந்தியா முழுமைக்கும் மொழி அடிப்படையில் மக்கள் உணர்வுகளுக்கேற்ப மாகாணங்களைப் பிரித்துவிட வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டு, 1928 ஆம் ஆண்டு ஒரு குழு நியமிக்கப்பட்டது.

**இந்திமொழி வளர்ச்சிக் கழகங்கள் :** இவ்வாறு இந்தியா முழுமையும் மொழி உணர்வு பெற்று மக்கள் விழிப்படைந்திருந்த காலத்தில் இந்தி மொழியாளர்கள் இந்தியை இந்தியாவின் பொதுமொழியாக்கத் திட்டம் தீட்டினர். அதன் விளைவாக, "நகரி பிரச்சாரனி சபா"

காசியில் 1893 ஆம் ஆண்டிலும், ''இந்தி சாகித்ய சம்மேளன்'' அலகாபாத்தில் 1910லும் தோற்றுவிக்கப் பட்டன. இவ்விரு அமைப்புகளும் இந்தியைத் தேவநாகரி எழுத்தில் வளர்ச்சியடையச் செய்து உன்னத நிலைக்கு உயர்த்துவதை நோக்கமாகக் கொண்டிருந்தன. இவ் வமைப்புகளின் தலைமைப் பதவிகளில் பி.டி. தாண்டன், கோவிந்ததாஸ், மதன்மோகன் மாளவியா போன்றவர்கள் இருந்தனர். அவர்கள் இந்தியாவிற்கு வடமொழி மய மான இந்தியை வளர்த்தெடுப்பதில் வெறிகொண்டிருந் தனர். இம்மொழித் திட்டம் இந்தி, வடமொழி பேசு வோர் நன்மைக்கானது என்பதனையும், இந்தி பேசாத மக்களுடைய அரசியல் தகுதியை இழக்கச் செய்வது என்பதனையும் உணர்ந்துகொண்ட மக்கள்—குறிப்பாக இந்தி பேசாத மக்கள் அதிருப்தி அடைந்தனர். எனவே பல்வேறு மொழியாளரும் மொழி வளர்ச்சிக் கழகங் களைத் தொடங்கலாயினர்.

**ஆட்சிமொழிப் பிரச்சினை :** இந்திக்குப் பிரதான எதிரியாக வட இந்தியாவில் உருது விளங்கியது. சையத் அகமத்கான் முகமதியர்களின் அரசியல் மற்றும் கலாச் சார நலன்களுக்காக அலிகார் இயக்கத்தைத் தொடங்கி னார். தேசிய இயக்கத்திற்குள்ளும் இந்தியை ஆட்சி மொழியாகக் கொண்டு வருவதில் ஒருமித்த கருத்து இல்லை. அரசியல் நிர்ணய சபை (Constituent Assembly) யில் ஆட்சிமொழிப் பிரச்சினை வந்தபோதும், இந்தி பேசுகிற தலைவர்கள், இரு வகையான எதிர்ப்புகளுக்கு முகம் கொடுக்க வேண்டியிருந்தது. நேரு, மௌலானா ஆஸாத் ஆகியோரின் தலைமையிலிருந்த ஒரு வகை யினர் காந்தியைப் போன்றே வடமொழி மயமான இந்தி 'மக்கள் மொழி' யாக முடியாது என்று கருதினர். ஆங்கிலம் நீடிப்பதே சரி என்று தென் னிந்தியத் தலைவர்கள் கருதினர். நிர்ணய சபையில்

உள்ளவர்களுள் பெரும்பாலோர் இந்தியை ஆதரிப்பவர்களாக இருந்தனர். நிர்ணய சபைக்கு வெளியிலும் 'இந்தி சாகித்ய சம்மேளன' அமைப்பு இந்திக்கு ஆதரவாக ஆர்ப்பாட்டங்களும் கூட்டங்களும் நடத்தி, ஆட்சி மொழிப் பிரச்சினையில் அரசியல் நிர்ணய சபையின் முடிவில் செல்வாக்கை ஏற்படுத்தியது.

வாக்கெடுப்பு நடந்தபோது இந்திக்கு ஒரு வாக்கு அதிகம் கிடைத்தது. இதன் அடிப்படையில்தான் பின்பு அரசியல் சட்டத்தின் 343 வது பிரிவாக, தேவநாகரி எழுத்தில் உள்ள இந்திமொழி இந்தியாவின் ஆட்சிமொழியாக உருவெடுத்தது.[1]

**ஆட்சிமொழிச் சட்டங்கள் :** விடுதலைக்குப் பிறகு இந்தியாவின் தேசிய மொழிகளாக தமிழ் உட்பட 15 மொழிகளை இந்தியா அரசியல் சட்டம் மூலம் ஏற்றுக் கொண்டது. (Article 343 eighth schedule) மாநிலங்கள் தங்கள் மாநில மொழிகளை ஆட்சி மொழிகளாகத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் உரிமையை 345வது பிரிவு வழங்கியிருக்கிறது. பிரிவு 350Aன் படி தொடக்கக் கல்வி தாய்மொழியிலேயே நடைபெற அனுமதித்திருக்கிறது.

---

1 When a vote was taken, on the issue at a meeting of the Congress Party members of the Assembly, the Hindi bloc won by a narrow margin of 78 against 77 votes caste for Hindustani. It was out of these controversies that Article 343 of the constitution, finally emerged making Hindi in the Devanagari script, the official language of India.

—Fabulal Fadia, 'The state polities in India', P. 463

இந்திய அரசியல் மொழியாக இந்தியை உருவாக்குவதிலும், செயற்படுத்துவதிலும் மத்திய அரசுக்கு உரிய பொறுப்பினைப் பற்றி 351 ல் வரையறை செய்யப்பட்டிருக்கிறது. அரசியல் சட்டம் 343ன் உட்பிரிவு 2ன் படி ஆங்கிலமும் 1965 வரை ஆட்சி மொழியாக நீடிக்கலாம். (English shall continue to be used for such purposes as might be specified by law up to 1965)

பிரிவு 346ல் மாநிலங்களுக்கு இடையிலும், மாநில மத்திய அரசுகளுக்கு இடையிலுமாக அலுவலகத் தொடர்பு மொழி பற்றிக் குறிப்பிடப்படுகிறது. எனினும் 246 வது சட்டத்தின்படி கல்வித்துறை மாநில அரசின் அதிகாரத்திற்குள் இருப்பதால் மத்திய அரசுக்குக் கல்வித் துறை பற்றிய கொள்கைகள் வகுக்க அதிகாரம் இல்லை. தேசியக் கல்விக் கொள்கை (National Policy of Education) என்றெல்லாம் மாநில அரசுக்கு ஆலோசனை கூறமுடியுமே தவிர அக்கொள்கையை நிறைவேற்ற அதிகாரம் செய்யமுடியாது. எனவே நடுவணரசு மிகவும் மேதாவித் தனமாக 1961 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் முதல் அமைச்சர்கள் மாநாடு கூட்டி தேசியக் கொள்கை ஒன்றை உருவாக்கி, அதன் மூலம் இந்தியை ஆட்சி மொழியாக்கி விட அவசரம் காட்டியது. ஆங்கிலத்தை இணை ஆட்சி மொழியாகவும், இந்தியை ஆட்சி மொழியாகவும் ஆக்குவதற்காக பள்ளிகளில் மும்மொழித் திட்டத்தை அறிமுகம் செய்தது.

**காங்கிரஸ் கட்சியின் நிலைபாடு :** 1965 ஆம் ஆண்டிற்குள் இந்தியை எல்லா மட்டங்களிலும் கொண்டு சென்றிட வேண்டுமென்ற சட்டத்திற்கேற்ப செயல் முறைகளில் தீவிரம் இல்லையென்று, ஆட்சியாளர்களை இந்தி மொழியாளர்கள் நச்சரிக்கத் தொடங்கினர். 15 ஆண்டுகளில் ஆங்கிலத்தை அறவே நீக்கிவிடுவது என்பது சாத்தியமாகப் படவில்லை. இருப்பினும் இந்தியை ஆட்சிமொழி ஆக்குவதில் தீவிரம் காட்டத் தொடங்கினர். ஆனால்

இந்தி பேசாத மாநிலங்களின் எதிர்ப்பினைச் சந்திக்கவும் அஞ்சினர். எனவே 1956ல் ஆட்சி மொழி பற்றிய ஆய்வு செய்ய ஒருவரை அரசு நியமித்தது. இந்தி பேசாத மக்கள் எதிர்க்காத வகையில் இந்தியை எப்படி விரைவில் ஆட்சி மொழி ஆக்குவது என்று அறிக்கையும் பெறப்பட்டது. பிறகு சிறப்புக்குழு ஒன்றை நியமித்து அறிக்கையை ஆய்வு செய்தனர். காங்கிரஸ் கட்சிக்குள்ளேயே நேரு, ஜி.பி. பாண்ட் போன்றவர்கள், நிதானமாய் நடைமுறைப் படுத்தல்(Go slow Policy) என்ற கொள்கையை உடையவர் களாக இருந்தனர். 1958 ஆம் ஆண்டு 'பிரக் ஜோதிஸ்பூர்' காங்கிரஸ் கூட்டுத் தொடரில், நேரு, பெரும்பான்மை என்ற பெயரில் சிறுபான்மையினர் மீது இந்தியைத் திணிக்கக்கூடாது. இந்தி பேசாத மக்கள் இந்தியை விரும்பு கிற வரையில் ஆங்கிலமே இணை ஆட்சி மொழியாக நீடிக்கும் என்ற வாக்குறுதியைத் தந்தார். அதனால் கோவிந்ததாஸ், பி.டி.தாண்டன் போன்றோர் எரிச்சலுற் றனர். என்னும் ஆங்கிலத்திற்கு 1965 வரை என்று விதித் திருந்த காலக்கெடு காலவரையறையின்றி நீக்கப்பட்டது. (Presidential Order 1960)

1963 ஆம் ஆண்டு ஆட்சி மொழிச் சட்டத்தின் மூன்றாவது உட்பிரிவின்படி 1965 க்குப் பிறகும் ஆங்கிலம் இணை ஆட்சி மொழியாக நீடிக்கலாம் (May) என்று கொண்டு வரப்பட்டுள்ளதால், இந்தி மொழியாளர்களின் ஆதிக்க எண்ணம் இன்றளவும் கனவாகவே உள்ளது.

தமிழகத்தில் மொழி உணர்ச்சி: 'தமிழச்சியைவிட இன்னொருத்தி அழகாய் இருப்பதை என்னால் சகித்துக் கொள்ள முடியவில்லை; தமிழனைவிட இன்னொருவன் புத்திசாலியாக இருப்பதை என்னால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. தமிழைவிட இன்னொரு மொழி சிறந்தது என்பதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை' (பாரதியார் கடிதங்கள்).

என்பன போன்ற உணர்ச்சி தமிழக மக்களின் உள்ளத்தில் பதிந்திருக்கிறது. 'திருவாசகம் இங்கு ஒருகால் ஓதில், கருங்கல் மனமும் கரைந்துருகும். ஆனால் ஆண்டவனே நேரடியாகக் கூறியதாகக் கூறப்படும் வேதங்களை எத்தனை முறை ஓதினும் இப்பயன் எழுவதில்லை' என்று சிவப்பிரகாச சாமியைப் பாடச் செய்தது தமிழ்.

'உலகத்தின் இருளைப் போக்குவது இரண்டு மட்டுமே ஒன்று உதயசூரியன்; மற்றது தன்னேரிலாதத் தமிழ்' என்று பாடச் செய்ததும் தமிழுணர்ச்சியே.

ஆங்கிலேயர் காலத்தில் 13-3-1919ல் சென்னை சட்ட மன்றத்தில் 'நான் தமிழில்தான் பேசுவேன்' என்று நரசிம்மன் என்பவர் போராடியிருக்கிறார்.

இவ்வாறு தமிழுணர்ச்சி என்பது சமயம் கடந்தும், இனம் கடந்தும் வரலாறு நெடுகிலும் வெளிப்பட்டு இந்தி எதிர்ப்புப் போராட்டத்திலும் வரலாறாகியிருக்கிறது.

**தமிழகத்தில் இந்தி எதிர்ப்புப் போராட்ட அரசியல் பின்னணி :** தமிழர்களின் உள்ளத்தில் மூன்று வகையான எதிர்ப்புகள் எப்போதும் கனன்று கொண்டிருக்கின்றன. அவை,

(1) பார்ப்பனீய எதிர்ப்பு

(2) இந்தி எதிர்ப்பு

(3) மத்திய ஆதிக்க எதிர்ப்பு.

இவை மூன்றும் ஏதோ ஒரு வகையில் ஒன்றோடொன்று தொடர்பு கொண்டேயிருக்கின்றன. தமிழகத்தில் உண்டான அரசியல் மாற்றங்களில் இவ்வெதிர்ப்பு உணர்ச்சிகள் நேரடியாகவே வெளிப்பட்டிருக்கின்றன.

மொழி அடிப்படையில் பிரிந்து போகாமல், சென்னை மாகாணமாக விளங்கிய நேரத்திலும் ஆரிய திராவிட நாகரிகங்களும் வாழ்க்கை முறைகளும் கருத்துகளும் தமிழர்களோடு ஒத்துப்போகவில்லை. எனவே ஆரிய

கலாச்சார ஆதிக்க மேலாண்மை இங்கே வேரூன்ற முடிய வில்லை.

1873 ஆம் ஆண்டிலேயே 'ஜோதி ராவ்பூலே' (Jyotirao Phooley) என்பவர் 'சத்திய சோதாக் சமாஜ்' (Sathyashodhak Samaj) எனும் ஓர் அமைப்பை, ஆரிய வருணாசிரமக் கொள் கைக்கு எதிர்ப்பாக நிறுவியிருக்கிறார். 19, 20 ஆம் நூற் றாண்டுகளில் இந்தியா முழுமையும் தோன்றிய, மொழி, இன சங்கங்களின் அமைப்புகளைப் போலவே தென்னிந்தி யாவிலும் தோன்றி அதன் தன் இன மக்களையும் மொழி யையும் முன்னெடுத்துச் சென்றிருக்கின்றன. அதன் தொடர்ச்சியாக 1914 ஆம் ஆண்டில் சி.என். முதலியாரால் திராவிடர் கூட்டுறவு அமைப்பு (Dravidian Association) நிறுவப்பட்டது. அது பார்ப்பனரல்லாதாரின் முன்னேற் றத்தையே நோக்கமாகக் கொண்டு விளங்கியது.

அகில இந்தியாவில் பார்ப்பனர்களுக்குச் சாதகமாக இந்தி பரவிடத் தொடங்கிய காலத்தில், பார்ப்பனரல்லா தார் வாழ்க்கை பாதிக்கப்படக்கூடாது என்பதை நோக்க மாகக் கொண்டு அது செயல்படத் தொடங்கியது. ஆங்கி லேயர் ஆட்சியின் கீழேயே திராவிட நாட்டைத் தனி நாடாக்கி, ஓர் அரசை நிறுவுதல் என்பது அதன் இறுதி இலக்காக இருந்தது.

பின்னர் 1916 ஆம் ஆண்டு தென்னிந்திய மக்கள் கழகம் தொடங்கப் பெற்றது. பி.ஜி செட்டி (P G. Chetty) வெளியிட்ட கொள்கை அறிக்கையால் அரசுப் பணிகளிலும், பொதுத்துறை நிறுவனங்களிலும் பார்ப்பனரல்லாதார்க்கு இடமின்மையை வெளிப்படுத்தி அதற்கான போராட்டம் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

1917ல் தென்னிந்தியர் நல உரிமைச் சங்கம் தோற்று விக்கப்பட்டது. பின்னர் அது நீதிக்கட்சியாக உருவாகி பார்ப்பன ஆதிக்கத்திலிருந்த காங்கிரஸ் கட்சியை அரசியல்

ரீதியாக எதிர்க்கத் தொடங்கியது. பார்ப்பனரல்லாதார்க்கும் ஆட்சி நிருவாகத்தில் பதவிகள் பெற வகை செய்தது. அறிவு என்பது பார்பனர்களுக்கு மட்டும் பரம்பரைச் சொத்தல்ல என்பதை மெய்ப்பித்து, அவர்களையும் மிஞ்சக்கூடிய ஆற்றலாளர்களை வெளி உலகுக்குக் காட்டியது. பார்ப்பன எதிர்ப்பு என்பதை வருணாசிரமக் கொள்கையை, மூடநம்பிக்கையின் தொகுப்பாக விளங்கும் இந்துமதச் சடங்குகளை எதிர்ப்பதாகக் கருதியது. ஆரியக் கலாச்சரத்தை எதிர்த்துத் தமிழ்க் கலாச்சாரத்தைப் பரப்பிட முன் வந்தது.

**தேர்தலும் இந்தியும் :** மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தத்திற்குப் பின்னர் வந்த முதல் தேர்தலில் (நவம்பர் 1920) காங்கிரஸ் கட்சி, தேர்தலைப் புறக்கணித்தது. நீதிக்கட்சி தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றது. 1936 ஆம் ஆண்டு வரை நீதிக்கட்சியே ஆட்சியிலிருந்தது. 1937 ஆம் ஆண்டு தேர்தலில் நீதிக்கட்சி தோற்றது. காங்கிரஸ் கட்சி 215 க்கு 159 சட்டமன்றத் தொகுதிகளையும், 46க்கு 26 மேலவைத் தொகுதிகளையும் பிடித்து இராஜாஜி தலைமையில் மந்திரிசபை அமைத்தது. உடனே சென்னை மாகாணத்தில் இந்திக்கு வெள்ளோட்டம் நடைபெறத் தொடங்கியது.

1938ல் பெரியார் நீதிக்கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். நீதிக்கட்சி 1944ல் திராவிடர்கழகமாக பெரியாரின் கீழ் 'வீரர்களின் திருக்கூட்ட'மாக மாறியது. 1945ல் திருச்சியில் திராவிட நாட்டுக்கான அரசியல் சட்டத்தை உருவாக்கியதோடு, கலைஞரின் சிந்தனையில் தோன்றிய வண்ணம், கறுப்பில் சிவப்பமைந்த கொடியும் உருவாக்கப்பட்டது. பெரியாரின் திருமணமும், துக்கநாள் அறிவிப்பும் 1949 செப்டம்பரில் அறிஞர் அண்ணா தலைமையில் தி.மு.க தோன்ற ஏதுவாயின. தி.க.வும் தி.மு.க.வும் அண்ணா குறிப்பிட்டதைப் போன்று

இரட்டைக்குழல் துப்பாக்கிகளாக இயங்கிக் கொண்டிருக் கின்றன.

**பெரியாரும் இந்தியும் :** 1922ஆம் ஆண்டில், ஈரோட் டிற்கு வடநாட்டிலிருந்து டாக்டர் அன்சாரி, விட்டல்பாய் பட்டேல், பண்டித மோதிலால் நேரு முதலான காங்கிரஸ் கட்சிப் பெரியவர்கள், சட்டமன்றத்திற்குப் போவதா வேண்டாமா என்ற உட்கட்சி முரண்பாடுகளைத் தீர்ப் பதற்காக வந்திருந்தனர். அப்போது பெரியாரின் வீட்டி லேயே அவர்கள் தங்கியிருந்தனர். அதன் நினைவாகப் பெரியார், தன் தகப்பனாரின் சமாதிக்குப் பக்கத்தில் ஓர் இந்திப் பள்ளிக்கூடம் ஒன்றை நிறுவி, படிக்கும் மாணவர் கள் 30 பேர்களில் பாதிப் பேருக்கு உணவும் தங்கும் வசதி யும் தமது சொந்த செலவிலேயே செய்து வந்ததுடன் போகும் இடமெல்லாம் இந்தியைப் பற்றி பெருமையாக ஏதேதோ பேசி வந்திருக்கிறார். (விடுதலை 1-8-1955)

1925ல் காங்கிரசை விட்டு வெளியேறியவுடன் குடி அரசில் இந்தியை எதிர்த்து எழுதி வந்திருக்கிறார். வர லாற்றைப் பின்னோக்கிப் பார்த்தால், இந்தியை எதிர்த்து எழுதிய முதல் தலைவராக பெரியாரே இருக்கிறார்.

**தமிழகத்தில் இந்தித் திணிப்பு :** அன்றைய சென்னை மாகாணத்தில் இராஜாஜி முதல் அமைச்சராகி, 'ஒரு சர்வாதிகாரத் தலைவனுக்குள்ள வசதிகளையெல்லாம் அடைந்து தன்னுடைய சுண்டு விரல் ஆட்டத்திற்கு ஏற்ற படி ஆடும், அங்கத்தினர்களைக் கொண்ட சட்டசபையை அமைத்துக்கொண்டு, அதன்பிறகு துணிவாக யாரும் எதுவும் கூற, மறுக்கமுடியாது என்ற அதிகார ஆணவத் தால் இந்தியைக் கட்டாயப் பாடமாக்க வேண்டும் என்று கூறினார். (ஈ.வெ.ரா. பெரியாரின் சிந்தனைகள் ப. 1824)

1937 வரை வாய்மூடி மௌனியாக சென்னை மாகா ணத்திற்குள் வர முடியாதிருந்த இந்தி, நீதிக்கட்சி

ஆட்சிக் கட்டிலிலிருந்து இறங்கியவுடன் 1938ஆம் ஆண்டே இரர்ஜாஜியின் பட்டுக் கம்பள வரவேற்போடு ஆட்சிக் கட்டிலேறியது நீதிக் கட்சியின் உதவியோடு சென்னை மாகாணத்தின் முதலமைச்சராக ஆட்சி நடத்திய டாக்டரி சுப்பராயன் 1938ல் இராஜாஜி மந்திரி சபையில் கல்வி அமைச்சராக இருந்தார். அவரது அறையில் தான் 1938 பெப்ரவரி 25 ஆம் நாள் தமிழ் நாட்டில் இந்தியைக் கட்டாயப் பாடமாக்க வேண்டுமென்ற முடிவு எடுக்கப்பட்டது. அடுத்த இரண்டு நாட்களுக்கெல்லாம் பெப்ரவரி 27ம் நாள் காஞ்சிபுரத்தில், 1924, 25ம் ஆண்டுகளிலேயே இந்தியை எதிர்த்து நேருவுடன் நேரடியாக வாதம் செய்த கான்பகதூர் கலிபுல்லா சாகிப், எம்.எல்.ஏ. என்பவரால் இந்தி எதிர்ப்பிற்கான கொடி உயர்த்தப்பட்டது. இந்தி எதிர்ப்பை எதிர்த்து அறிஞர் அண்ணா ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தார். 'இந்தி எதிர்ப்புப் பிரச்சாரத்தில் அண்ணாதுரை என்ற ஒரு புதிய பெயர் தமிழ்நாட்டு மூலை முடுக்கெல்லாம் எதிரொலிக்கத் தொடங்கியது' (நெஞ்சுக்கு நீதி. ப.41).

**இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கலைஞர் :** 1938 ஆம் ஆண்டு, கலைஞரின் பிறந்த நாளான ஜுன் 3ம் நாள் முதல் இந்தி எதிர்ப்புப் போராட்டத்திற்குத் தமிழகம் தயாராகிக் கொண்டிருந்தது. சோமசுந்தர பாரதியார் போன்ற காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் கூட இராஜாஜியின் இந்தித் திணிப்புக்கு எதிராகக் கச்சை கட்டி நின்றனர். அன்று, இந்தி எதிர்ப்பு முதல் மாநாடு சைதாப்பேட்டையில் மறைமலையடிகள் தலைமையில் நடந்தேறியது. இப்போராட்டத்தில் பெரியார் தலைமையில் அறிஞர் அண்ணா, கி. ஆ. பெ., சோமசுந்தர பாரதியார் மூவலூர் இராமாமிர்தம் போன்ற பலர் அணி வகுத்து நின்றனர்.

இந்தித் திணிப்புக்கு ஆதரவாக இராஜாஜியும், எதிர்ப்பாக பெரியாரும் கடற்கரையில் கூட்டங்களை

நடத்தினார். இராஜாஜிக்குக் கறுப்புக்கொடி காட்டும் போராட்டம் நடத்தப்பட்டது. பட்டுக்கோட்டை அழகிரி தலைமையில் திருச்சியிலிருந்து சென்னை வரை 200 கல் தொலைவு இந்தி எதிர்ப்புப் பிரச்சார வழி நடைப் பயணம் 1-8-38ல் திருச்சி டவுன் ஹாலிலிருந்து தொடங்கியது. பெரியார் வழியனுப்பு விழாவில் கலந்து கொண்டார்.

''இந்தியை எதிர்த்துக் கிளர்ச்சி செய்பவர்கள் பெரிய இராஜத் துரோகிகளாவார்கள். அவர்கள் மீது ஆயுள் பரியந்தம் அல்லது தூக்கு போடும் படியான குற்றப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என்று இராஜியுடன் தனிப்பட்ட முறையால் பகைமை கொண்டிருந்த நிலையிலும், வர்க்கநலனை மனதில் கொண்டு அருப்புக்கோட்டை அரசியல் மாநாட்டின் தலைமை உரையில் சத்தியமூர்த்தியார் எச்சரித்தார். இப்பேச்சைக் கண்டித்து அப்போதைய மெயில் பத்திரிகை மட்டும் தலையங்கம் எழுதியுள்ளது.

இந்தித் திணிப்பை எதிர்த்து ஜெகதீசன் உண்ணா விரதமிருந்தார். சி,டி. நாயகம். ஈழத்து சிவானந்த அடிகள், கே.எம். பாலசுப்பிரமணியம், சண்முகாநந்தசாமி (ஒரு துறவி), அறிஞர் அண்ணா, சுவாமி அருணகிரிநாதர் முதலிய 1500 பேர் சிறை சென்றனர். இரண்டு பேர் துப்பாக்கிச் சூட்டிற்குப் பலியானார்கள். அக்கால Justice பத்திரிகையின் ஒவ்வொரு இதழின் மூன்றாம் பக்கமும் இந்தி எதிர்ப்புப் போராட்டம் பக்கமாகவே விளங்குகிறது.

இந்தச் சூழலில் பட்டுக்கோட்டை அழகிரியின் பேச்சுகளால் தமிழகத்து இளைஞர்கள், குறிப்பாக மாணவர்கள் கிளர்ந்து இந்தி எதிர்ப்புப் போராட்டங்களை ஆங்காங்கு நடத்தி வந்திருக்கின்றனர்.

அம்மாணவர்களுள் திருவாரூர் உயர்நிலைப்பள்ளியில் ஏழாம் வகுப்பு (இரண்டாம் பாரம்) படித்துக் கொண்டிருந்த கலைஞரும் ஒருவராகி இந்தி எதிர்ப்பின் முதல்

கட்டப் போராட்டதிலேயே முனைந்து நின்றிருக்கிறார்.

'1938ல் நாள்தோறும் மாலை நேரத்தில் மாணவர்கள் பலரை அணிவகுத்துத் திருவாரூர் வீதியில் ஊர்வலம் விடுவேன். கையில் தமிழ்க்கொடி. இராஜாஜி கட்டாய இந்தி எனும் கட்டாரியால் தமிழ்த் தாயைக் குத்த முற்படுவது போன்ற படம் அமைந்த ஒருவண்டி! என் தலைமையில் அந்த ஊர்வலம். நான் எழுதிய ஒரு பாடல்;மாணவர்கள் அனைவரும் சேர்ந்து ஒலிப்பர்.

வாருங்கள் எல்லோருும போருக்குச் சென்றிடுவோம்!
வந்திருக்கும் இந்திப் பேயை விரட்டித் திரும்பிடுவோம்!, (நெ. நீதி.ப.44) என்று அந்நிகழ்ச்சியைக் கலைஞரே குறிப்பிடுகிறார். இந்தி எதிர்ப்புப் போராட்டம் அறிஞர் அண்ணாவைத் தமிழுலகுக்கு இனம் காட்டியது போலவே, தொடர்ந்து வந்த இந்தி எதிர்ப்புப் போராட்டங்கள் கலைஞரைத் தமிழர்களின் தலைவராக்கியதற்கு இம்முதல் போராட்டம் வித்தூன்றிச் சென்றிருக்கிறது. அதனால்தான் 'தமிழகத்தில் மூண்டெழுந்த மொழிப் போராட்டத்தில் முளைத்தெழுந்தவன் நான்' என்று கலைஞர் தன்னைக் குறிப்பிட்டுக் கொள்கிறார். (நெ.நீதி.ப.45)

ஊர்வல வழியில் பள்ளிக்கூட இந்தி ஆசிரியரிடமே கலைஞர் இந்தி எதிர்ப்புத் துண்டறிக்கையைக் கொடுத்திருக்கிறார். இது அவர் எதைச் செய்தாலும் நேர்மையான போர் முறைகளோடுதான் செய்வர் என்ற அரசியல் வாதிகளின் பிற்காலப் பாராட்டுரையின் அடித்தளம். ஆனால் துண்டறிக்கை கொடுத்ததற்குத் தண்டனையும் அடைந்திருக்கிறார். அது பற்றி கலைஞர்.

'துண்டு அறிக்கையை இந்தி ஆசிரியர் கையிலே கொடுத்ததும் ஒரு புரட்சிகரமான செயலென்றுதான் கருதினேன். வகுப்பறையில் உள்ள கரும்பலகையில் இந்திச் சொற்கள் சிலவற்றை அவர் எழுதினார். அவைகளை உச்சரிக்குமாறு எனக்கு ஆணையிட்டார். நான் எழுந்து நின்றேன்.

'ம் படி பார்க்கலாம்' என்றார்.

எனக்குப் புரிந்தால் தானே படிக்க முடியும். அதனால் பேசாமல் நின்றேன். அருகே வந்தார். வகுப்பறை எதையோ ஆவலுடன் எதிர்பார்த்து நின்றது. ஆசிரியர் என் காதைத் திருகினார். 'படிக்கமுடியுமா? முடியாதா?' என்று உறுமினார். புரியவில்லை என்றேன். கன்னத்தில் ஓங்கி அறைந்தார். வகுப்பறை சுழல்வது போன்ற உணர்ச்சியில் தலை சுற்றியது எனக்கு. சமாளித்துக் கொண்டேன். ஆசிரியர் ஏன் அடித்தார் என்பது எனக்குப் புரிந்து விட்டது.' என்று நெஞ்சுக்கு நீதியில் குறிப்பிடுகின்றார்.

அடக்கு முறைகளும் தண்டனைகளும் நேரும்போது சிலர் தமது கொள்கையில் உத்வேகம் அடைவார்கள். சிலர் ஒதுங்கிக் கொள்வார்கள். கலைஞர் முதல்தரம். அதனால் போராட்டக்களத்தில் இன்றும் முன்வரிசையில் நிற்கிறார்.

முதல் கட்டப் போராட்டத்தின் முடிவு: அமைதியாயிருந்த தமிழகத்தை அமளிக் காடாக்கிய இராஜாஜி, கட்டாய இந்தியை திரும்பப்பெற்றுக் கொண்டு, விருப்பப் பாடமாக மட்டும் இருக்கும் என்று அறிவித்தார். இவ் வெற்றி பெரியாரின் தலைமைக்கும், அண்ணாவின் தீர்மானத்திற்கும் கலைஞரின் போராட்டத்திற்கும் கிடைத்த வெற்றியாய் அமைந்தது.

வெற்றியோடு தமிழர்களின் நீண்ட நாளைய ஒற்றுமைக்கும் இப்போராட்டம் வழிகாட்டியது. திராவிடர், ஆரியர் என்ற உணர்வு தீவிரமடைந்தது. பார்ப்பனர்கள் வடமொழியைமட்டும் பற்றிப் பேசாமல் தங்கள்கண்களைத் தேவார, திருவாசக, திவ்ய பிரபந்தங்கள் பக்கமும் திருப்பத் தொடங்கினர். திருப்பினால் தான் சமயமாவது பிழைக்கும்

என்று உணரத் தொடங்கினார்கள். சங்கராச்சாரியார் கூட திராவிட குருபண்டார சந்நதி வீட்டிற்குச் சென்று கூட்டு முயற்சிக்கு ஒப்பந்தம் பேசலானார். அமைச்சரவையில் 60 விழுக்காட்டினராக இருந்த பார்ப்பன அமைச்சர்களின் எண்ணிக்கை இரண்டு அல்லது மூன்று என்ற அளவிற்குச் சுருங்கியது.

**பழைய பால் கமிஷன் :** காங்கிரஸ் கட்சி சென்னை மாகாணத்தில் இரண்டாம் தடவையாக அமைச்சரவை அமைத்து ஆட்சி செலுத்திய காலத்தில் மீண்டும் கட்டாய இந்திக்கு வழி வகுத்தனர். 1946 ஆம் ஆண்டு இறுதியில் கல்வி முறையை மாற்றி அமைப்பதற்கான 'கல்வி புனர் நிர்மாணக் கமிட்டி' அமைக்கப்பட்டது. இந்தியைக் கல்வி முறையில் எப்படிப் புகுத்துவது என்பதும் அக்கமிட்டியாரால் பரிசீலனை செய்யப்பட்டது. அக்கமிட்டியார் 'இந்தி இம்மாகாணத்தில் இஷ்டபாடமாக வேண்டுமானா இருக்கலாமே ஒழிய கட்டாயப் பாடமாக இருக்கக்கூடாது. எந்த ஒரு ஆசிரியரும், எந்த ஒரு மாணவரையும் இந்தி படிக்குமாறு வற்புறுத்தக்கூடாது. மாணவர்களுக்கு எல்லாப் பாடங்களும் தாய்மொழியிலேயே போதிக்கப்படவேண்டு' மென்று ஆலோசனை வழங்கினர்.

அரசு விருப்பத்துக்கு மாறான அறிக்கையை கல்வி அமைச்சர் ஏற்றுக்கொள்ளவில்லை; ஏற்காதது மட்டுமல்ல, அந்த அறிக்கையையே வெளியிடவுமில்லை. அப்படியே அதை மறைத்துவிட்டு, வேறொரு கமிட்டியை நியமித்தார். அக்கமிட்டியாரும் கட்டாய இந்தியை ஆதரிக்கவில்லை. எனவே இந்தியைத் தமிழ்நாட்டில் மட்டும் விருப்பப்பாடமாகவும், 1948 ஜூன் 20 ஆம் நாள் அரசாணை எண் 1643 படி ஓர் ஆணையைப் பிறப்பித்தனர். தமிழ்நாட்டிலும் இந்தி அல்லது வடமொழி என்று விருப்பம் தெரிவிக்கலாமே தவிர இரண்டில் ஒன்றைக் கட்டாயமாகக் கற்றே தீர வேண்டி இருந்தது.

இந்தியோடு வேறு சில மொழிகளையும் சேர்த்து அவற்றில் ஏதாவது ஒன்றைப் படிக்கலாம் என்று அரசு

வழி வகைகளைச் செய்தது. ஒவ்வொரு பள்ளியிலும் இந்தியை மட்டுமே கற்பிக்க அரசு வழிவகைகளைச் செய்தது. ஒவ்வொரு பள்ளியிலும் இந்தி ஆசிரியர் இருக்க வேண்டியது அவசியம் என்றும், அப்படி இந்தி ஆசிரியரை வைத்துக் கொண்டிராத பள்ளிகளுக்கு அரசாங்கம் நிதி உதவி அளிக்காது என்று ஓர் ஆணையையும் 1948 ஆம் ஆண்டில் அரசு வெளியிட்டது.

'இச் சூழ்ச்சிகளைப் புரிந்துகொண்ட தமிழகம் மீண்டும் ஓர் இந்தி எதிர்ப்புப் போராட்டத்துக்குத் தயார் ஆனது. பெரியாரின் அறிவிப்பைத் தொடர்ந்து ஆள் ஒன்றுக்கு 25 ரூபாய் வீதம் கொடுத்துத் தாங்களாகவே போராட்டத்திற்கு வருகிறோமென்று பலர் துடித்தனர்.' (விடுதலை 22—8—48)

'இந்தி நம் நாட்டுச் சீதோஷ்ணத்திற்குப் பொருத்தமற்றது; நம் நாக்குக்கு ஏற்க முடியாதது; நமக்குத் தேவையற்றது. இந்தி மனிதர்களை மந்திகளாக்கும்' என்று திரு. வி. க. (ஈ. வெ. ரா. ப. 1793) வெகுண்டெழுந்தார். ஆனால் கட்டாய இந்தி தேவை என்று சுதேசமித்திரன் (25—6—1946) தலையங்கம் தீட்டித் தன்னை அடையாளம் காட்டிக் கொண்டது.

'பள்ளிக்கூடப் பிள்ளைகள் சம்பள உயர்வு வேறு. இரண்டு ரூபாய் 12 அணா கொடுத்தவர்கள் இனி ஐந்து ரூபாய் நாலணா கொடுக்க வேண்டும். ஐந்து ரூபாய் நாலணா கொடுத்தவர்கள் இனி ஏழு ரூபாய் எட்டணா கொடுக்க வேண்டும். முன்பு எட்டு மாதம் சம்பளம் கொடுத்தவர்கள் இனி இந்த உயர்ந்த தொகையைப் பத்து மாதத்திற்குக் கொடுக்க வேண்டும்' (ஈ. வெ. ரா. ப. 1794). இப்படி இந்தி தமிழர்களின் கல்வியையும் பொருளாதார நிலையில் பாதிக்கத் தொடங்கியது.

போராட்டம் வெகு சீக்கிரம் தமிழகம் முழுவதும் பற்றிக் கொண்டது. மறைமலையடிகள் தலைமையில் இந்தி

எதிர்ப்பு மாநாடு சென்னை 'செயிண்ட் மேரீஸ் ஹாலில்' தெருக்களும் அடைபடும் வண்ணம் மக்கள் கூட்டத்திற் கிடையே நடந்தது. சென்னையில் இந்தி எதிர்ப்பாளர் களை இராணுவ லாரியில் ஏற்றிச் சென்று முப்பத்தோரு கல் தொலைவில் கொண்டு சென்று காவல் வைத்தனர். அப்போராளிகளுள் எட்டு மாதக் கர்ப்பிணியும் ஒருவர்.

கலைஞர்! அண்ணாவின் பிறந்த நாளான செப்டம்பர் 15 ஆம் நாள் (1948 ஆம் ஆண்டு) கலைஞருக்கு இரண்டா வது திருமணத்திற்கான நாள்.

'அன்றுதான் இந்தியை எதிர்த்து நாடெங்கும் உள்ள பள்ளிகளின் முன்னே ஒரு நாள் அடையாள மறியல் நடை பெற வேண்டுமென்று பெரியார் அவர்கள் அறிக்கை விட்டிருந்தார். என் திருமணத்திற்கு நாள் குறித்து அழைப் பிதழ்கள் எல்லாம் அச்சான பிறகுதான் பெரியாரின் அறிக்கை வந்தது.... என் வீட்டு வாசலிலேயே பந்தலிட்டுத் திருமணத்தை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டன. காலையில் மணப்பந்தலுக்கு மணமகளை அழைத்துவர மேள தாளங்கள் சென்றன.

'உள்ளூர் உறவினர் நண்பர்கள் பந்தலில் குழுமியிருந் தனர். ஊர்ப்பெருந்தனக்காரர்கள் சிலரும் அன்றைய திருமணத்திற்கு வந்திருந்தது எனக்கு வியப்பை அளித்தது. நான் பந்தல் முகப்பில் நின்றுகொண்டு வருவோரை வரவேற்றுக் கொண்டிருந்தேன். அப்போது உயர்நிலைப் பள்ளியில் அடையாள மறியல் செய்வதற்காக இந்தி எதிர்ப்பு ஊர்வலம் என் வீட்டு வழியாக வந்தது. உணர்ச்சி மயமான முழக்கங்கள்! என் உள்ளத்தில் ஏதோ ஓர் எழுச்சி! அந்த ஊர்வலத்தோடு சேர்ந்து கொண்டு புறப்பட்டு விட்டேன்.

பெரியார் வாழ்க!

தமிழ் வாழ்க!

இந்தி வீழ்க!

'இந்த ஒலியில், திருமணப்பந்தலில் முழங்கிய இசைஒலி எடுபடவில்லை. என் வீட்டிலிருந்து நான்கு பர்லாங்கு தொலைவில் உள்ள உயர்நிலைப் பள்ளிக்கு ஊர்வலம் சென்றது. நானும் அத்துடன் சென்று விட்டேன்.

'மணவீட்டில் 'மாப்பிள்ளை எங்கே?' என்ற கூச்சல், தவிப்பு. மணப்பெண் எனக்காக மணவறையில் ஒரு மணி நேரத்திற்கு மேலாகக் காத்திருந்தாள்.... பெண் வீட்டார் முணுமுணுப்புத் தாங்காமல், என் நண்பர்களும் உறவினர்களும் என்னை ஊரெல்லாம் தேடியலைந்திருக்கிறார்கள். இறுதியில் மறியல் நடைபெறும் இடத்திற்கு வந்து சேர்ந்தார்கள். மறியல் முடித்து நாங்கள் திரும்பிக் கொண்டிருந்தோம். அன்று ஒரு வேடிக்கை என்னவென்றால், அடையாள மறியல் நடந்த பல ஊர்களில் தோழர்கள் கைது செய்யப்பட்டனர். சில ஊர்களில் யாரும் கைது செய்யப்படவில்லை. அதில் திருவாரூரும் ஒன்று. கைது செய்திருந்தால் மாப்பிள்ளை 'மாமியார்' வீட்டுக்குப் போயிருப்பார் மணவறைக்குப் போயிருக்க முடியாது.' (நெ. நீதி, பக். 112, 113)

வரலாற்றில் எந்தத்தலைவருக்கும் இல்லாதசிறப்பு இது கலைஞரது பேச்சைக் கேட்பதற்காக 'பல முதலிரவுகள் ஒத்திப் போடப்படுகின்றன.' ஆனால் மொழிக்காக கலைஞரே தனது திருமணத்தை சிறிது நேரம் ஒத்திப் போட்டிருக்கிறார். தமிழர்களின் வாழ்வு சீரழியும் போது தன் வாழ்வை முதலில் நிறுத்திப் பார்க்காமல், திருமண நாளன்றும் அரசியல் போராட்டத்தில் கலைஞர் கலந்து கொண்டிருக்கிறார்.

**விளைவு:** ஐதராபாத்தினை இந்தியத் துருப்பினர் பிடித்த போர்க்காலச் சூழலால் போராட்டம் நிறுத்தப்பட்டது. எனினும் வெற்றி போராட்ட வீரர்களுக்கே கிட்டியது. அரசு கொள்கை அளவில் 'இந்தி கட்டாயம் இல்லை' என்று மீண்டும் உறுதி கூறியது.

**போராட்டத்தில் பெரியாரும் கலைஞரும் :** காங்கிரஸ் கட்சியின் மூன்றாவது மந்திரி சபை அமைந்த காலம். மீண்டும் இந்தி திணிப்புக்கான தீவிரத்தில் காங்கிரசார் முனைந்திருந்தனர். கல்வி அமைச்சராக இருந்த சி. சுப்பிரமணியம் இந்திக்குப் பள்ளியில் தேர்வு உண்டு என்று அறிவித்தார். எனவே மீண்டும் இந்தி எதிர்ப்புப் போராட்டம் தொடங்கியது.

மத்திய அரசு அலுவலகங்கள் குறிப்பாக, இரயில்வேயும், தபால் தந்தித் துறையும் இந்தியை மெல்ல மெல்ல ஏற்றுக் கொண்டிருந்தது. எனவே, 'கொஞ்சம் கொஞ்சமாகச் சுருக்கை நகர்த்தி நம் கருத்தை அறுக்கும் கொலை பாதகச் செயலை எதிர்க்கிறோம்' (ஈ. வெ. ரா. ப. 1815) என்று கூறி பெரியாரின் திராவிடர் கழகம் ஆண்டு தோறும் ஆகஸ்டு மாத முதல் தேதியில் இந்தி எழுத்துகளை அழிக்கும் கிளர்ச்சியை மேற் கொண்டது.

'உன் நாட்டிற்கு உன் மொழிக்குத் துரோகம் செய்து வடவனுக்குக் காட்டிக் கொடுத்து வயிறு வளர்ப்பது திராவிடன் பண்பா?' என்று பெரியார் முழங்கியவாறு தமிழ் நாடு முழுவதும் இரயில்வே பயணமாகப் புறப்பட்டு இரயில் நிலையங்களில் கழகத்தவர்களைச் சந்தித்துப் போராட்டத்தை முடுக்கி விட்டார்.

தி. க. வும். தி. மு. க. வும் இரட்டைக்குழல் துப்பாக்கியாக இப்போராட்டத்தை நடத்தியது. அறிஞர் அண்ணா, கே. ஆர். இராமசாமி, ஈ. வெ. கி. சம்பத் ஆகியோர் கோவை இரயிலடியில் இந்தி எழுத்துக்கள் அழிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கலைஞர் திருச்சி இரயில் நிலையத்தில் இந்தி எழுத்துக்களை அழிக்கும் போராட்டத்தில் ஈடுபட்டார். அது பற்றி

'எனக்கு அந்தப் போராட்டத்தில் ஒரு பெரும் நல் வாய்ப்பே கிடைத்தது, திருச்சி ரயிலடியில் பெரியாரும் நானும் இந்தி எழுத்துக்களை அழித்தோம். ரயிலடிக்களம்

முடிந்து நானும் ஆயிரக்கணக்கான கழகத்தோழர்களும் கொடி ஏந்தியவாறு திருச்சி நகர வீதிகள் அனைத்திலும் நடந்து சென்றே ஊர்வலம் நடத்தினோம். தெப்பக்குளம் வழியாக ஊர்வலம் வந்தபோது காரில் சென்று கொண்டிருந்த பெரியார் அவர்கள் இறங்கி எங்களை வாழ்த்தி வழியனுப்பினார். இரு வேறுபட்ட கட்சிகளாகப் பிரிந்த பிறகு ஏற்பட்ட இந்தத் திடீர் சந்திப்பில் பாசமும் பற்றும் பட்டுப் போகவில்லை என்ற உண்மை ஒளிவிடலாயிற்று' (நெ. நீதி, ப. 165).

தி. மு. க. பற்றி தி. க. வினர் கடுமையாக விமர்சனம் செய்து கொண்டிருந்த நேரத்தில் கூட மொழிப் பிரச்சினையில் ஒன்றுபட்ட உணர்ச்சியைக் காட்டினர்.

பெரியார் சென்ற பிறகு கலைஞர் ஊர்வலத்தைத் தொடர்ந்தார். தெப்பக்குளம் எதிரே அஞ்சல் நிலையத்தில் இந்தி எழுத்துக்கள் அஞ்சிக் கொண்டிருந்தன. அஞ்சுவது போல நடித்து மீண்டும் மீண்டும் அச்சுறுத்திக் கொண்டிருக்கும் இந்தியைப் பார்த்தார். வினை எச்சம் தீயெச்சம் போன்றதல்லவா! அப்பெயர்ப்பலகை உயரமான இடத்தில் இருந்தது. (பெயர்ப்பலகை மட்டும் தானா உயரமான இடத்தில் இருக்கிறது?) ஆனால் கலைஞர் அதற்காக அஞ்சாமல் தோழர்களின் துணையோடு சறுக்குப் பகுதிகளில் ஏறி இந்தி எழுத்துக்களின் மீது கரியைப் பூசினார்.

**தேசியக் கொடிக்குத் தீயிடும் தீர்மானம்:** இந்தி எதிர்ப்பாளர்கள் மீது ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்ற கேள்விக்கு, 'அதனால் உண்டாகும் செலவு 2200 ரூபாய் தான். அதுவும் மண்ணெண்ணெய் வாங்குவதற்குத்தான் செலவாகிறது. நடவடிக்கை எடுத்தால் அதிகம் செலவாகும்' என்று இரயில்வே அமைச்சர் பதிலளிக்கும் முறையில் போராட்டத்தைக் கேலி செய்தார்; ஆண்டுதோறும் ஆகஸ்டு மாதத்தில் இந்தி எழுத்துக்களைப் போராட்டக்காரர்கள் அழிப்பதும், மத்திய அரசினர் மண்ணெண்ணெய்

ஊற்றிக் கழுவி விட்டு மீண்டும் எழுதுவதுமாக இருந்தனர் மக்களின் உணர்ச்சிகளைப் புரிந்து கொள்ளாமல், பூசிய தார்மீது மத்திய அரசு ஊற்றிய மண்ணெண்ணெய் போராட்டக்காரர்களின் உள்ளத்தில் கனன்றுகொண்டிருந்த நெருப்பிலும்பட்டது. எனவே ஜூலை17, 1955ல், திருச்சியில் வடவராட்சிச் சின்னமாகிய தேசியக் கொடியை ஆகஸ்டு முதல் நாளில் கொளுத்த வேண்டும் என்று தீர்மானம் கொண்டு வரப்பட்டது. தமிழ்நாட்டின் மீது இனி இந்தி கட்டாயமாகத் திணிக்கப்படமாட்டாது என்று காமராசர் வாக்குறுதி அளித்தபின் தமிழகம் அமைதியடைந்தது.

**நேருவுக்குக் கறுப்புக் கொடி:** 1950 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட இந்திய அரசியல் சட்டத்தின்படி 15 ஆண்டுக்குள்—1965 ஆம் ஆண்டுக்குள் ஆங்கிலத்தை அகற்றி விட்டு இந்தியை அமரச்செய்வதற்காக அரசினரால் நியமிக்கப்பட்ட 'கேர் குழு' தனது திட்டத்தைத் தாக்கல் செய்தது இந்த அறிக்கை பற்றியும் அதில் குறிப்பிட்டிருந்த திட்டங்கள் பற்றியும் தி. மு. க. தனது கண்டனத்தைக் கடுமையாகத் தெரிவித்தது.

அதன் தொடர்ச்சியாக 1957 செப்டம்பர் 21ஆம் நாள் திருவண்ணாமலையில் துறவி அருணகிரி அடிகள் தலைமையில் இந்தி எதிர்ப்பு மாநாடு நடந்தது. அம்மாநாட்டில் அறிஞர் அண்ணா ஆற்றிய சொற்பொழிவு இன்றளவும் இந்தியை எதிர்த்துப் போராடும் தமிழர்களுக்கு வழிகாட்டியாக விளங்குகிறது.

''எங்களுக்கு இந்த உலகத்தில் இரண்டு எஜமானர்கள் தாம்உண்டு. ஒன்றுஎங்கள் மனசாட்சி; மற்றது இந்த நாட்டு மக்கள்' என்று அண்ணா அம்மாநாட்டின் மூலம் இந்தி எதிர்ப்புப் போராட்டத்திற்கு அழைப்பு விடுத்தார்.'' (நெ. நீதி ப. 324).

1957 அக்டோபர் 13ஆம் நாள் நாடெங்கும் கண்டனக் கூட்டம். பெத்துநாயக்கன் பேட்டைப் பொதுக்கூட்டத்தில் கலைஞருக்கு மேடைப் பேச்சில் இயல்பாக எழும்

உணர்ச்சியும் குமுறலும் இந்தி மொழி ஆதிக்கம் என்ற நிலையில் உச்சமடைந்தது.

கண்டனக் கூட்டங்களுக்குப் பிறகு இந்தி எதிர்ப்புப் போராட்ட உணர்வில்தமிழகமே குமுறிக்கொண்டிருந்தது. இக்காலத்தில் 'தமிழகத்தின் வடக்கு எல்லையை மீட்போம்' என்று ம. பொ. சி.யும், தென்பாண்டி மண்டலத்தில் நடந்த சாதிச் சண்டைக்குப் பிறகு சாதி ஒழிப்புப் போராட்டத்தில் பெரியாரும் ஈடுபட்டிருந்தனர். கட்டாய இந்தியை முதன் முதலாகத் தமிழகத்தில் அறிமுகப்படுத்திய இராஜாஜியும் கூட 'இந்தி எதிர்ப்புப் போராட்டத்தைக் கைவிடக்கூடாது' என்று பேசிக் கொண்டிருந்தார்.

இச்சமயத்தில், 'பெரியாரைப் பைத்தியக்காரர்' என்றும் ம. பொ. சி.யின் போராட்டத்தை அறிவிலித்தனம் என்றும், தி. மு. க.வின் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை சிறுபிள்ளைத்தனம் என்றும் பேசித் தமது மேதாவித் தனத்தை வெளிப்படுத்திக் கொண்டார் ஜவகர்லால் நேரு.

1957 டிசம்பர் 27, 28ஆம் நாட்களில் நாகர்கோவிலில் தி. மு. க. மாநாடும் 29ஆம் நாளில் கழகப் பொதுக்குழுவும் கூடியது. 'ஜனவரி முதல் வாரம் சென்னைக்கு வரும் நேருவுக்குக் கறுப்புக் கொடி காட்டுவது' என்று அப்பொதுக்குழு தீர்மானித்தது.

''இந்தியத் துணைக்கண்டத்தின் மிக உச்சாணிக் கொம்பில் இருந்தவர் பண்டிதர் நேரு. அவர் விரலசைத்தால் இமயமலைகூட இடம்பெயரும் என்று வருணிக்கப் பட்ட பிரதமர்.' அவருக்கு 1958 ஜனவரி 6ஆம் நாள் கழகச் சார்பாக இருபதாயிரம் பேர் கலந்து கொண்டு கறுப்புக் கொடி காட்டினர். இப்போராட்டத்தைத் தடுக்க முன் எச்சரிக்கையாக அறிஞர் அண்ணா, கலைஞர் உட்பட பலரை அரசு கைது செய்தது. மொய்தீன்பிச்சை, கோவிந்தராவ் எனும் இருவரைச் சாகடித்தது. இவ்வளவுக்கும் பிறகு பேராசிரியரும் பிறரும் முன்னின்று விமான

விமான நிலையத்திலேயே நேருவுக்குக் கறுப்புக்கொடி காட்டித் தமிழர்களின் மானத்தைக் காத்தனர்.

**உறுதிமொழியைச்சட்டமாக்கக்கூறும்போராட்டம்:** நேரு தென்னக மக்கள் விரும்பும் வரை ஆங்கிலம் இணை ஆட்சி மொழியாக இருந்து வரலாம் என்று கூறினாரே தவிர, உறுதிமொழியைச் சட்டமாக்கும் முயற்சியில் தயக்கமே காட்டி வந்தார். மொழிப் பிரச்சினை காங்கிரஸ் கட்சியின் செல்வாக்கை வடக்கிலும் தெற்கிலும் குப்பிடத்தக்க அளவு குறைத்துக் கொண்டு வந்தது. தி. மு. க. நேருவின் உறுதி மொழியைச் சட்டமாக்கக்கோரி, அதற்கான போராட்டத் திட்டங்களை வகுத்தது.

இப்போராட்டத்தின் முதல் முழக்கமாக 18—4—63-ல் சென்னைக் கடற்கரையில், கூட்டம் நடந்தது. இந்தித் திணிப்பைக் கண்டித்த அக்கூட்டத்திற்கு கலைஞர் தலைமை தாங்கினார்; அறிஞர் அண்ணா வீர உரையாற்றினார். கடற்கரைக் கூட்டத்தையடுத்து, இராஜாஜியுடன் இராயப் பேட்டையிலும், கோகலே மண்டபக்கூட்டத்திலும் கலைஞர் உரையாற்றி இந்தி எதிர்ப்பு உணர்ச்சியை எழுப்பினார்.

சென்னையில் அனைத்துக்கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் அண்ணா, இராஜாஜி,காயிதே மில்லத்,ம.பொ.சி.மற்றும் பல தலைவர்களும் காங்கிரஸின் இந்தித் திணிப்பைக் கண்டனம் செய்ததோடு, நேருவிடம் 'English May Continue' என்பதற்குப் பதிலாக 'English shall Continue' என்று மாற்றச் சொல்லி வேண்டினர். மக்கள் குரலை வழக்கம் போலவே காங்கிரசார் மதிக்கத் தவறினர். மாறாக சீன நாட்டுடன் போர் என்ற காரணம் காட்டி 3—5—1963 ஆம் நாள் பிரிவினைத் தடைச் சட்டத்தை நிறைவேற்றி, அதன் மூலம் தி. மு. க. விற்கு வாய்ப்பூட்டுப் போட நினைத்தனர்.

அச் சூழலில் 1963 ஜூன் 8, 9, 10 ஆகிய நாட்களில் தி. மு. க. வின் தலைமைச் செயற்குழுவும் கூடின.

வினைத் தடைச் சட்டம் வந்த நிலையில் கழகத்தைக் காப்பதற்கும், இந்தித் திணிப்பை எதிர்ப்பதற்கும் நீண்ட காலப் போராட்டத் திட்டம் வகுக்கப்பட்டது. அதற்குரிய செயல் திட்டங்களை வகுப்பதற்காக, அந்தப் பொதுக்குழு ஒரு போராட்டக்குழுவை அமைத்து அதற்குத் தலைவராக கலைஞரைத் தேர்ந்தெடுத்தது.

ஜூன் 13ல் சென்னை வந்த நேரு, 'இவை வெறும் அரசியல் தந்திரம்' என்றார். அன்றைக்குப் புரியாமல் போயிருந்தாலும் காலம் கலைஞரின் தீர்க்க தரிசனத்தை மெய்ப்பித்துக் காட்டி விட்டது.

**சட்ட எரிப்புப் போராட்டம் :** பொதுக்குழு முடிவுக்கேற்ப கலைஞர் போராட்ட மாநாடுகளில் தீவிரமாக இருந்தார். 3—8—1963ல் சேலத்தில் பாசறை கூட்டம், 4—8—63ல் சேலம் அம்மா பேட்டையில் தாளமுத்து நடராசன் அரங்கில் இந்தி எதிர்ப்பு மாநாடு. மாநாட்டில் இந்தியை எதிர்க்கும் முழக்கங்கள். மறைமலையடிகள், சோமசுந்தர பாரதியார், திரு.வி.க. போன்ற அறிஞர்களின் எச்சரிகைகள் சுவரொட்டிகளாக தமிழகம் முழுவதும் ஒட்டப்பட்டன. இப்போராட்ட அணிவகுப்பில் கட்சிப் பாகுபாடுகள் தலைகாட்டவில்லை.

1963 ஆகஸ்டு 25ல் சோழமண்டல இந்தி எதிர்ப்பு மாநாடு தஞ்சையிலும் செப்டம்பர் 22 ஆம் நாள் பாண்டிய மண்டல மாநாடு திருநெல்வேலி பேட்டையிலுமாக, மண்டல மாநாடுகள் முடிந்ததும் சென்னையில் மிகப்பெரிய இந்தி எதிர்ப்பு மாநாடு கூடியது.

சென்னை மாநாட்டில் ஆட்சி மொழி பற்றிய 17வது சட்டப் பிரிவினை எரியூட்ட வேண்டுமென்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. 17—2—63ல் சென்னையில் அண்ணாவும், தஞ்சையில் கலைஞரும் பங்கு கொள்ள இருந்தனர். 16—2—1963ல் மதுரையில் நடந்த சட்ட எரிப்புப் போராட்டத்திற்குப் பார்வையாளராகச் சென்றிருந்த கலைஞரை,

தலைமை தாங்கினார் என்று குற்றம் சாட்டி காங்கிரஸ் அரசு கைது செய்தது.)

**உயிர் வேட்டை:** கடந்த காலங்களில் நடந்து வந்த இந்தி எதிர்ப்புப் போராட்டங்களைக் காட்டிலும் அப்போது அரசு அதிக மூர்க்கத்தனத்துடன் செயல்பட ஆரம்பித்தது. தமிழர்கள் உணர்ச்சி வயப்பட்டிருந்தனர். 'சிங்கத் தமிழன் சின்னசாமி', 'தே.மு. சிவலிங்கம்' கீரனூர் முத்து, சிதம்பரத்தில் இராசேந்திரன், இளங்கோவன், மாயுரம் சாரங்கபாணி, சிவகங்கை இராசேந்திரன் ஆகியோரின் உயிர்களை அரசின் போக்கு அரக்கத்தனமாகப் போக்கியது.

**உச்சகட்டப் போராட்டம்:** எப்படியும் 1965 ஜனவரி முதல் இந்தியை ஆட்சி மொழியாக ஆக்கியே தீருவது என்பதில் முனைப்போடு இந்தி வெறியர்கள் இருந்தனர் நேருவின் வாக்குதிக்கு மாறான அச்சட்டம் நிறைவேறு வதைத் தமிழகம் சகித்துக் கொள்ள முடியாமல் எரிமலையாய் வெடித்தது. இராஜாஜி அச்சட்டப் பிரிவை அரபுக் கடலிலே தூக்கி எரியச் சொன்னார்.

இந்நிலையில் 8—1—65ல் சென்னை அறிவகத்தில் கூடிய தி. மு. க. தலைமைச் செயற்குழு, '1965 ஜனவரி 26ஆம் நாள் குடியரசு நாளாக இருந்தாலும் இந்தி திணிப்பு நாளாக இந்திய அரசு மாற்றியிருப்பதால் அந்நாளைத் துக்கநாளாகக் கொள்வது' என்று தீர்மானித்தது. அதன் தொடர்ச்சியாகக் கண்டனக் கூட்டங்கள் நடந்தன. துக்க நாளின் வெளிப்பாடாகக் கறுப்புக் கொடிகளை ஏற்றினர். கறுப்புச் சின்னம் அணிந்தனர்.

அறிஞர் அண்ணாவும் கலைஞரும் பிறரும் 25—1—65 நள்ளிரவில் கைது செய்யப்பட்டனர். இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் மாணவர்கள் இறங்கினர். ஊர்வலங்கள் நடந்தன அனைத்துக் கல்லூரி மாணவர்கள் நடத்திய இந்தி எதிர்ப்புக் (கடற்கரைக்) கூட்டத்தில் இந்தி நூல்களை எரித்தனர். பல இடங்களில் போலீசார் மட்டுமின்றி ஆளும்

கட்சியினரும் மாணவர்கள் மீது தடியடி நடத்தினர். ஏற்றப்பட்ட கறுப்புக்கொடிகள் அரசினரால் இறக்கப்பட்டன. கறுப்புச் சின்னம் அணிந்தவர்கள் தெருவில் நாடமாடக்கூட அரசு அனுமதிக்கவில்லை. சிதம்பரத்தில் துப்பாக்கிச்சூடு. இதனால் தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீர் குலையும் நிலை ஏற்பட்டது.

திருச்சி சிறைச்சாலையிலிருந்து பிப்ரவரி 2 ஆம் நாள் கலைஞர் விடுதலை செய்யப்பட்டார். 1965 பிப்ரவரி இரண்டாம் வாரத்தில் தமிழகத்தில் இந்தி எதிர்ப்புப் போராட்டம் உச்சமடைந்தது. மீண்டும் தமிழகத்தில் துப்பாக்கிகளைக் கொண்டு அரசாங்கம் பேசியது.

8—2—65ல் மாணவர்கள் உண்ணாநோன்பு, 12—2—65ல் தமிழ் நாடு எங்கும் பொதுவேலை நிறுத்தம்; தீக்குளிப்புகள் என்று தமிழ் நாடு அமளிக்காடாகியது.

'மாணவர்கள் கல்லூரிக்கு வராவிட்டால் போகட்டும் எனக்கு ஐந்து கோடி ரூபாய் மிச்சம்!'

'தி.மு. கழகத்தவர்கள் கோழைகள்.'

'தீக்குளிக்கிறவர்கள் வறுமையால் செத்திருக்கலாம். அல்லது யாராவது கொலை செய்து நரபலி கொடுத்திருக்கலாம்' என்றெல்லாம் ஆளும் கட்சியினர் கேலி பேசினர்.

அறிஞர் அண்ணா, தமிழகத்தின் கொந்தளிப்பையும், உயிரிழப்பையும் கண்டு, மாணவர்களைப் போராட்டத்தைக் கைவிடும்படி வேண்டிக் கொண்டதற்கேற்ப மாணவர்கள் ஒத்தி வைத்தனர். ஆனாலும் ஆளும் கட்சியினர் அடுத்த ஒரு வாரத்திற்குள், இரவோடு இரவாக இந்தியப் பாதுகாப்புச்சட்டத்தின் கீழ் முதல் கைதி என்ற பெருமையைக் கலைஞருக்கு அளித்து கைது செய்தனர். நெஞ்சு வலியையும் பொருட்படுத்தாது லாரியில் ஏற்றிப் பாளையங்கோட்டைத் தனிமைச் சிறையில் அடைத்தனர்.

**ஆட்சிக் கட்டிலில் தி. மு. க. :** *1967* ஆம் ஆண்டு தேர்தல், இந்தித்திணிப்பிற்கு சரியான பாடம் கற்பித்து, காங்கிரசாரை வீட்டிற்கு அனுப்பியது. தேர்தல் முடிவுகள் தி.மு.க. வுக்குச் சாதகமாக வந்ததும், இந்தி எதிர்ப்புத் தொடர்பான கோப்புகள் தீயிடப்பட்டன.

தி.மு.க. ஆட்சிக்கு வந்ததும், வரலாற்றுணர்வோடு, 16—4—67ல் கலைஞர்,சின்னச்சாமியின் நினைவுத்தூணைத் திறந்து வைத்தார்.

இந்தி எதிர்ப்புப் போராட்ட வீரர்களைத் தியாகிகளாக மதித்து தி.மு.க. அரசு ஓய்வூதியம் வழங்கியது.

தி.மு.க. ஆட்சிக் காலத்திலும் மத்திய அரசு இந்திக் காரர்களுக்கு ஆதரவாகச் சட்டம் கொண்டு வர முயன்ற போது, தமிழகத்தில் மாணவர்கள் கிளர்ந்தெழுந்து மத்திய அரசுச் சொத்துகளுக்குத் தீயிட முனைந்தனர்.

கலைஞர் தலையிட்டு அமைதி உண்டாக்கினார். மாணவர்களுக்காகத் தமிழகச் சட்டமன்றம் அவசரமாகக்கூடி இந்தியைத் தமிழகத்துப் பள்ளிகளிலிருந்து விரட்டியடித்து வரலாற்றுச் சிறப்புமிக்க இருமொழித் திட்டத்தைக் கொண்டு வந்தது.

**முடிவுரை :** *1938* லிருந்து இத்தகைய வரலாற்றினை உடைய இந்தி எதிர்ப்புப் போராட்டம் முடிந்துவிட வில்லை. 'ஆகாஷ் வாணி'யாகவும், 'தேசிய நிகழ்ச்சி யாகவும்,' தணிக்கையில் சலுகை பெற்ற 'இந்திப்பட மாகவும்' நர்சரி பள்ளிகளுமாக இந்தியைத் திணிக்கும் முயற்சிகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. விஞ்ஞான யுகத்தில் ராக்கெட்டில் பயணம் செய்பவர்களுடன்கூட இந்தியில் பேசியே மகிழ்கிற மனதும் போக்கும் பல நேரங் வெளிப்படுகின்றன. அந்த நேரங்களில் எல்லாம் கலைஞரின் உடனடி எதிர்ப்புக் குரல் எழுகிறது. அதனால் வந்த சுவடு தெரியாமல் இந்தி மீண்டும் மறைகிறது. எனினும் அது

தலைக்கு மேல் தொங்கிக் கொண்டிருக்கும் கத்திதான். அதனால்தான் அறிஞர் அண்ணா, தஞ்சை மாணவர் மாநாட்டில், தமக்குப்பின் பேச நேர்ந்த கலைஞரைப்பற்றி, 'நான் இத்துடன் முடிக்கவில்லை; தம்பி தொடர்கிறான்' என்று குறிப்பிட்டுச் சென்றாரோ!

'Man Cognising himself loosing himself and regaining himself again and again in history.' என்று மார்க்ஸ் குறிபட்டது. நமது இந்தி எதிர்ப்புப் போராட்டத்திற்குப் பொருத்தமாக இருக்கிறது.

இன்றைக்குத் தான் கட்டாய இந்தி இல்லையே என்பவர்கள் ஏமாற்றுக்காரர்கள். "கற்பு அழிப்பு என்றால் பலாத்காரமாகச் செய்தல் என்பது மாத்திரம் தானா? மற்ற வகைகளில் நெருக்கடி, தடுக்கமுடியாத தன்மை, திருட்டுத்தனமாக மயக்குதல், சிறிது சிறிதாக இணங்க வைக்கச் சுந்தர்ப்பங்களை உண்டாக்குதல் முதலிய காரியங்களால் நடத்தினால் அது கற்பழிப்பு ஆகாதா! (ஈ வெ.ரா., ப.1816) இந்தியைத் திணிப்பவர்களும் இன்றைக்குஇப்படித்தான் செயல்படுகிறார்கள். இந்திமொழி ஆதிக்கம் என்பதை நாம் முற்றிலும் முறியடிப்பது என்பது சோஷலிச சமூக அமைப்பில் மட்டுமே சாத்தியம். அதுவரை இந்தியின் மேலாதிக்கம் எப்படி நுழையலாம் என்றே இடம் தேடிக் கொண்டிருக்கும்.

1938 ஆம் ஆண்டு மூண்டெழுந்த இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் மூலம் இன்று தமிழர்களுக்கெல்லாம் தலைவராக விளங்கும் கலைஞரை.

'எவ்வளவு பழி சுமத்தினாலும், எவ்வளவு இழிவு படுத்தினாலும், இவற்றை எவ்வளவு பேர் நம்பினாலும், நான் மாத்திலும் களைத்துப் பின்வாங்குகிறவனல்ல. எனக்கு எனது லட்சியம் தவிர வேறு ஒன்றுமே இல்லை. அதற்காகவே உயிர் உள்ள அளவும் பாடுபட்டுத்தான் சாவேன்

யார் என்ன சொன்னாலும் வெட்கப்படப் போவதில்லை. யார என்ன மோசம் செய்தாலும் சரி, துரோகம் செய்தாலும் சரி, வாழ் நாள் முடிகிறவரை கிடைத்த ஆயுதத்தைக் கொண்டு காரியம் செய்கிறதென்ற முடிவில் தான் இருக்கிறேன்'

என்று கூறிய பெரியாரைக் காணமுடிகிறது. இந்தி எதிர்ப்புப் போராட்ட தொடக்கமுதல் வரலாற்றின் நெடு கிலும் நாயகனாய் விளங்கும் கலைஞரே இந்தித்திணிப்புக்கு முற்றுப் புள்ளி வைக்கும் காலம் விரைவில் வரட்டும்.

★